# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 143 | வியாழக்கிழமை Thursday | 20.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு தொகை ரூ.25 லட்சமாக உயர்வு

## முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் இலவச மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவ காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு, தற்போதுள்ள ரூபாய் 5 லட்சத்திலிருந்து ரூபாய் 25லட்சமாக உயர்த்தப்படும்." எனதமிழக முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டம் தொடங்கியதும் விதி எண் 110-ன் கீழ் முதல்வர் விஜய் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார்.

அப்போது அவர், "ஒரு உயிரின் மதிப்பை, அவரது வருமானம் தீர்மானிக்கக் கூடாது. வசதிப்படைத்தவர், வசதி குறைவானவர் என்ற நிலைமருத்துவத்துறையில் இருக்கக் கூடாது, அனைவருக்கும் சமமான மருத்துவ சேவை, எளிதாக கிடைக்க வேண்டும் என்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது.

மருத்துவம் என்பது சலுகை அல்ல; ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை.

ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதில் தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் மிக கொடியது, மருத்துவத்தைத் தேடிவரும் மக்களின் பாதையில் இருக்கும் தடைகளான வறுமை, தொலைவு, மருத்துவர் பற்றாக்குறை, மருந்துகளின் விலை, மருத்துவ விழிப்புணர்வு இல்லாமை, காத்திருப்பு, அவசரகால வசதியின்மை போன்றவற்றை படிப்படியாக அகற்றி, ஏழை-பணக்காரர், கிராமம்-நகரம் என்ற பாகுபாடின்றி, ஒவ்வொருவருக்கும் தரமான மற்றும் எளிதான மருத்துவ சேவை கிடைக்கச் செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது நமது அரசு.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் சில அறிவிப்புகளை சட்டப்பேரவை விதி 110 இன் கீழ் இன்று வெளியிட விரும்புகிறேன்.

(i) வடசென்னை மக்களுக்கு உயர்தர மருத்துவ சேவை எளிதில் கிடைக்கும் வகையில், பெரம்பூரில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் 400 படுக்கைகள் கொண்ட உலகத் தரத்திலான "பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை" அமைக்கப்படும்.

(ii) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் இலவச மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவ காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு, தற்போதுள்ள ரூபாய் 5 லட்சத்திலிருந்து ரூபாய் 25 லட்சமாக உயர்த்தப்படும். திருநங்கைகளுக்கானஅறுவைசிகிச்சை:

திருநங்கையர்களுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகள் கூடுதலாக சென்னை ஸ்டான்லி, திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

(iii) தமிழ்நாட்டில், 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு, புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படாத நிலையில், தரமானமருத்துவசேவைக்குத் தேவையான செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களை உருவாக்கும் வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூபாய் 351 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்கள் உருவாக்கப்படும்.

7 புதிய அரசு செவிலியர்கல்லூரிகள்தொடங்கப்பட்டு, 660 B.Sc. செவிலியர் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர் பள்ளிகளில்கூடுதலாக1,925 கூடுதல் மாணாக்கர் இடங்கள், இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட 12 துணைமருத்துவப்படிப்புகளில் 2,778 மாணாக்கர் இடங்கள், மருந்தியல் படிப்புகளில் 735 கூடுதல் இடங்கள் என மொத்தம் சுமார் 6,098 கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும்.

(iv) தமிழ்நாட்டில்அதிகரித்து வரும் புற்றுநோய்களைத் தடுக்கவும், தரமான சிகிச்சை வழங்கவும், "முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம்" (Chief Minister's Cancer Care Mission) 673 கோடியே 44இலட்சம்ரூபாய்மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 471 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் G+14 தளங்களுடன் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுஅமைக்கப்படும்.


மேலும், ஐந்து மண்டல புற்றுநோய் மையங்கள் (Regional Cancer Care Centres) தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும். முதற்கட்டமாக, மதுரை ராஜாஜி மருத்துவமனையில்ரூபாய்84கோடியில் G+8 தளங்களுடன் மண்டல புற்றுநோய் மையம்தொடங்கப்படும்.

ரோபோடிக் அறுவை சிகிச்சை, Linear Accelerator (LINAC) கதிர்வீச்சு, நவீன கருவிகள், இலக்கு மற்றும் நோய் எதிர்ப்பு சிகிச்சைகளுக்காக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு 106 கோடியே 17 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். மருத்துவர்களுக்கு பயிற்சியும், நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவும் 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

மேலும், தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் அரியலூர்ஆகியமாவட்டங்களில் 1.22 லட்சம் பெண்களுக்கு8கோடியே 70இலட்சம்ரூபாய்மதிப்பீட்டில் HPV DNA பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

மொத்தம்673கோடியே 44இலட்சம்ரூபாய்மதிப்பீட்டில்,புற்றுநோய்தாக்கத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்." என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

# தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்புத்துறை அதிரடி சோதனை



சென்னையில் செயல்பட்டு வரும் கணினி நிறுவனத்தில் வருமானவரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில், இன்று டிரான்ஸ்பார்மர் கொள்முதல் முறைகேடு வழக்கு தொடர்பாகத் தமிழகம் முழுவதும் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தினர். சென்னை, ஆழ்வார்பேட்டை, டி.டி.கே. சாலையில் செயல்பட்டு வரும் கணினி தொழில்நுட்பத் தொடர்பு நிறுவனத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

கணினி உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் இந்த நிறுவனத்திற்கும் வெளிநாட்டுநிறுவனங்களுக்கும், இந்தியாவின் சிறிய நிறுவனங்களுக்கும் இடையே நடந்த நிதிப் பரிமாற்றங்களில் உள்ள முறைகேடுகள் மற்றும் புகார்களின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

நேற்று 5 இடங்களில் சோதனை

இந்த நிறுவனத்துக்கு தொடர்புடைய எர்ணாவூர், ஆழ்வார்பேட்டை, விருகம்பாக்கம், ராஜமங்கலம் உள்ளிட்ட 5 இடங்களில் சோதனை நடந்தது. அனைத்து இடங்களிலும் ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் தீவிர ஆவணச்சரிபார்ப்பு உள்ளிட்ட சோதனையில் ஈடுபட்டனர்.

வரி செலுத்தாமல் வருவாயை மறைத்ததாக வந்த புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பு தொடர்பாகஎழுந்த இந்த புகார்கள் மற்றும் கணக்கில் வராத நிதிப் பரிமாற்றங்கள் தொடர்பான ஆவணங்களைச் சரிபார்க்க இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன. அதன்படி கணினி பதிவுகள் மற்றும் நிதி ஆவணங்கள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டன. சோதனை முடிவில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் மதிப்பு, ரொக்கம் உள்ளிட்டவை தெரிய வரும் என்று வருமானவரித்துறை அதிகாரிகள் கூறினர்.

லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை

இந்தநிலையில்,சென்னையில் இன்று டிரான்ஸ்பார்மர் கொள்முதல் முறைகேடு வழக்கு தொடர்பாகத் தமிழகம் முழுவதும் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். இதில் சென்னையில் மட்டும் பெருங்குடி (4 இடங்கள்), அண்ணா நகர்(3 இடங்கள்) உள்பட 27 இடங்களிலும், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. மேலும், 10-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலும் இந்தச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

# உண்மையான தமிழ் உணர்வு த.வெ.க. அரசிடம் இல்லை. தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை

## வெளிநடப்பு செய்த எடப்பாடி பழனிசாமி ஆவேசம்



சென்னை: "ஆட்சி அதிகாரம் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என தவெகவினர் நினைக்கின்றனர். எந்த அளவுக்கு வேகமாக இந்த ஆட்சி வந்ததோ, அதே அளவுக்கு வேகமாக விரைவில் படுபாதாளத்துக்கு சென்றுவிடும்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானங்களை விவாதத்திற்கு எடுக்க மறுத்ததால் அதிமுக எம்எல்ஏக்கள் அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பி வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "ஆகஸ்டு 12-ம் தேதி சவுதியில் தங்கியிருந்த 4 மீனவர்கள் மீன் பிடித்தனர். அப்போது ஈரான் கடல்கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலில் குண்டடிப்பட்டு உயிரிழந்த மீனவர் மாவீரன்(38) உடலை மயிலாடுதுறைக்கு கொண்டுவர வேண்டும்.

அங்கு படுகாயமடைந்து சவுதியில் சிகிச்சை பெறும் 3 மீனவர்களை மீட்க வேண்டும் என கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது 5 நாட்களாக சட்டப்பேரவையில் குரல் எழுப்பி வருகிறோம். ஆனால், இதனை குறிப்பிடக்கூட சபாநாயகர் அனுமதிக்கவில்லை. இதற்காக நாங்கள் வெளிநடப்பு செய்யும்போது தவெக உறுப்பினர்கள் சிரிக்கின்றனர். உணர்வுள்ள தமிழர்கள் இப்படிச் சிரிப்பார்களா?.

இப்போது ஆட்சியே நடக்கவில்லை, ரீல்ஸ்தான் விடுகின்றனர். இவர்கள் எப்படி நாட்டு மக்களைக் காப்பாற்றுவார்கள். கர்நாடகாவில் பூர்வீகமாக வசிக்கும் 3 தமிழர்கள் வனத்துறை அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர், அதற்கும் இந்த அரசு கண்டனம் தெரிவிக்கவில்லை. இப்படி வெளிமாநிலத்தில் இருந்தாலும் சரி, வெளிநாடுகளில் தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் கடந்த கால அரசுகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து தீர்வு காண்பார்கள்.

ஆனால்,இப்போதைய அரசு எதைப்பற்றியும் கவலைப்படுவது இல்லை. இந்த அரசுக்கு தமிழ் உணர்வு என்பதே இல்லை, இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஆட்சி அதிகாரம் இருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என தவெகவினர் நினைக்கின்றனர். மக்கள் இதனை பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த அளவுக்கு வேகமாக இந்த ஆட்சி வந்ததோ, அதே அளவுக்கு வேகமாக விரைவில் படுபாதாளத்துக்கு சென்றுவிடும்" என்றார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### மின்வாரியத்திற்கு மின்மாற்றிகள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடு

## மதுரை அவனியாபுரத்தில் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் வீட்டிலும் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை



தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடு நடைபெற்றதாக புகார் எழுந்துள்ளது.

இதையடுத்து, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 30 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

மின்வாரியத்திற்கு உபகரணங்கள் வழங்கிய நிறுவனங்களின் உரிமையாளர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

மேலும், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் 10-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலும் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.ஒரு பகுதியாக,

மதுரை அவனியாபுரத்தில் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் பாஸ்கர் வீட்டிலும் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

மின்வாரிய உபகரணங்கள் கொள்முதல் தொடர்பான ஆவணங்கள், பணப் பரிவர்த்தனைகள் உள்ளிட்டவை குறித்து அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுவருவதாகதகவல்வெளியாகியுள்ளது.

## கலவை அருகே சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை – சித்தப்பா மீது பரபரப்பு குற்றச்சாட்டு



கலவை அருகே 14 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்து கர்ப்பமாக்கி யதாக சித்தப்பா மீது பரபரப்பு குற்ற ச்சாட்டு எழுந்து ள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம், கலவை அடுத்த தட்டச்சேரி இருளர் குடியிருப்பைச் சேர்ந்த சிறுமி, பெற்றோர் வெளியூ ரில் வேலைக்குச் சென்றபோது தனி யாக இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவரது சித்தப்பா பாலாஜி மிரட்டிதொடர்ந்துபாலியல்வன்கொடுமைசெய்ததாக சிறுமி குற்றம்சாட்டியு ள்ளார். மிரட்டல் காரணமாக நடந்த சம்பவத்தை உடனடியாக வெளியே கூற முடியவில்லை என சிறுமி தெரிவித்ததாக கூறப்படுகிறது. மேலும், தனது அண்ணனும் மதுபோதையில் தன்னிடம் அத்துமீறியதாக சிறுமி தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. சிறுமி கர்ப்பமானது பின்னர் தெரியவந்ததை அடுத்து உறவினர்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்து ள்ளனர். இந்த வழக்கில் சிறுமியின் அண்ணன் சுரேஷ் கைது செய்யப்பட்டதாகவும், சித்தப்பா பாலாஜி மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தனக்கு நடந்த சம்பவம் குறித்து நீதிபதியிடம் உண்மையை தெரிவித்ததாக சிறுமி கூறியுள்ளார். சித்தப்பா பாலாஜிதான் தன்னை தொடர்ந்து பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், தனது கர்ப்பத்திற்கு அவரே காரணம் என்றும் சிறுமி குற்றம்சாட்டியுள்ளார். சிறுமியின் குற்றச்சாட்டுகள் குறித்து போலீசார் உரிய விசாரணை நடத்தி, உண்மை நிலையை வெளிக்கொண்டு வர வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## விசிக பிரமுகரின் வீட்டிற்கு சென்ற கும்பல் வீட்டில் இருந்த பெண்கள் மீது தாக்குதல்



உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வைப்பாளையம் கிராமத்தில் மணல் கடத்தல் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவித்ததாக கூறி விசிக பிரமுகரின் வீட்டிற்கு சென்ற கும்பல் வீட்டில் இருந்த பெண்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர் இதில் காயம் அடைந்த கல்லூரி மாணவி உட்பட இருவர் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள வைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரமேஷ் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகியான இவரது வீட்டிற்கு செவ்வாய்க்கிழமை மாலை 7 பேர் கொண்ட கும்பல் வந்துள்ளது இந்த கும்பலை சேர்ந்தவர்கள் வீட்டில் இருந்த பெண்களிடம் ரமேஷ் எங்கே என்று கேட்டுள்ளனர் அப்போது அவர்கள் அவர் வெளியூர் சென்றுள்ளார் என்றும் எதற்கு கேட்கிறீர்கள் என்று கேட்ட பொழுது நாங்கள் கெடிலம் ஆற்றில் மணல் அள்ளுவதைகாவல்துறையினருக்குதகவல்தெரிவிக்கும் ரமேஷை பார்க்க வேண்டும் எனக் கூறி தகராறு செய்ததோடு ரமேஷ் மகளான கல்லூரி மாணவி மற்றும் அவரது தம்பி மனைவி பாக்கியலட்சுமி ஆகிய இருவரையும் தாக்கி உள்ளனர் இதில் படுகாயம் அடைந்த பாக்கியலட்சுமி மற்றும் கல்லூரி மாணவி அகல்யா ஆகிய இருவரும் திருநாவலூர் காவல் நிலையத்தில் இதுகுறித்து புகார் தெரிவித்ததோடு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் இது குறித்த புகாரின் பேரில் திருநாவலூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## தூத்துக்குடி மேற்கு மண்டல அலுவலகத்தில் சுதந்திர தின விழா; கொடியேற்றி மரியாதை

தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி கொடியேற்றி வைத்ததை தொடர்ந்து மேற்கு மண்டல அலுவலகத்தில் தேசியக் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேற்கு மண்டலத் தலைவி அன்னலட்சுமி கோட்டுராஜா தலைமையில் மேற்கு மண்டல அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா, மாநகர உறுப்பினர்கள் இசக்கி ராஜா, பொன்னப்பன், ஜான் கந்தசாமி மற்றும் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலர் ராஜபாண்டி, பொறியாளர் ராகவி, அரசு ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சுதந்திர தின விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டது.

## முகுந்தராயபுரம் அரசு ஆட்டுப்பண்ணையில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.08.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமின் ஒரு பகுதியாக, வாலாஜா வட்டம் முகுந்தராயபுரத்தில் செயல்பட்டு வரும் அரசு ஆட்டுப்பண்ணையில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, அரசு ஆட்டுப்பண்ணையின் செயல்பாடுகள், ஆடுகளின் பராமரிப்பு, வளர்ப்பு முறைகள் மற்றும் பண்ணையின் தற்போதைய நிலை குறித்து அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார். மேலும், பண்ணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு பணிகள் மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத் துறை மரு. வெங்கடேஸ்வரன் (பொறுப்பு), உதவி இயக்குநர் மரு. திருநாவுக்கரசு, வட்டாட்சியர் திரு. நடராஜன் மற்றும் கால்நடை மருத்துவர்கள் உடனிருந்தனர்.

### கோவை வ.உ.சி. பூங்கா பகுதியில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில்

## சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பாக நடைபெற்ற 10வது ஆண்டு தடகளப் போட்டி

### வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பரிசுகளும் கோப்பைகளும் வழுங்கபட்டது

கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பு சார்பாங, 10-வது ஆண்டு தடகளப் போட்டி - 2026 கோவை மாநகரில் உள்ள நேரு விளையாட்டரங்கில் கடந்த 17ம் தைதி துவங்பி, இன்று ஆகஸ்ட் 19,வரை மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் கோவை, திருப்பூர், ஈரோடு



மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து 40-க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்றன. இளம் விளையாட்டு வீரர்கள் தங்களின் விளையாட்டுத் திறமை, ஒழுக்கம் மற்றும் போட்டி உணர்வை வெளிப்படுத்துவதற்கான சிறப்பான வாய்ப்பை இப்போட்டி வழங்கியது. இங்கு நடைபெற்ற

தடகளப் போட்டியில் 12 வயதுக்குட்பட்டோர், 14 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் என நாண்கு, ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டது..

பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் மூன்று நாட்களும் வேகம், வலிமை, சகிப்புத்தன்மை, சுறுசுறுப்பு மற்றும் விளையாட்டு மனப்பான்மை ஆகியவற்றை சிறப்பாக வெளிப்படுத்தினர். இப்போட்டி மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி உணர்வை வளர்த்ததுடன், ஒழுக்கம், குழு ஒருங்கிணைப்பு, விடாமுயற்சி மற்றும் சிறப்புத்திறன் ஆகிய பண்புகளையும் வளர்க்கும் வகையில் அமைந்தது. கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர்களின் தலைமையில் இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பிஎஸ்ஜி பப்ளிக் பள்ளியின் முதல்வர் கிரிஷ் ஈஸ்வரன் தலைவராக இருந்து போட்டியின் ஏற்பாடுகளுக்கு வழிகாட்டினார்.

இதில் பி.ஏ. இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வர் மகேஷ் நாராயணன், தலைமைக் குழுவின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து நிகழ்வின் சிறப்பான ஒருங்கிணைப்பில் பங்காற்றினார். இதில் 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில், ஆண்கள் பிரிவில் ரக்ஷன் ஜெய் அஸ்வத் மற்றும் முகேஷ் சாய்ராம் ஆகியோர் இணைந்து சாம்பியன் பட்டத்தைப் பெற்றனர். பெண்கள் பிரிவில் சன்விகா சாம்பியன் பட்டத்தை வென்றார். 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில், கவின் பிரணவ் மற்றும் ஆருத்ரா, சாய்ந்தவி ஆகியோர் சிறப்பிடம் பெற்றனர்., 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் கார்த்தீஸ்வரன் மற்றும் ஜெய் நிதர்ஷனா ஆகியோர் சாம்பியன் பட்டங்களை வென்றனர். 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில், மோஹித் சூர்யா, மற்றும் ஹரிணி ஆகியோர் சாம்பியன் பட்டங்களை வென்றனர். 12 முதல் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பிஎஸ்ஜி பப்ளிக் பள்ளி பள்ளி 129 புள்ளிகளுடன் சுழற்கோப்பையை வென்றது.

பெண்கள் பிரிவில் விவேகானந்தா அகாடமி பள்ளி 117 புள்ளிகளுடன் சுழற்கோப்பையை வென்றதுடன், 230புள்ளிகளுடன் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சாலக்குடி முய்தாய் போட்டியில் ஈரோடு மாணவர்கள் பதக்க வேட்டை

### 3 தங்கம், 1 வெள்ளி

### ஈரோட்டுக்கு பெருமை சேர்த்த இளம் வீரர்கள்



கேரள மாநிலம் சாலக்குடி முனிசிபல் ஸ்டேடியத்தில் ஆகஸ்ட் 7 முதல் 9, 2026 வரை நடைபெற்ற தென்னிந்திய அளவிலான முய் தாய் (Muay Thai) குத்துச்சண்டை போட்டியில், தமிழ்நாடு அணி சார்பில் ஈரோடு The Action Zone Boxing பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற 5 மாணவர்கள் பல்வேறு எடைப் பிரிவுகளில் பங்கேற்று சிறப்பான வெற்றிகளைப் பெற்றனர்.

R. நலன்ராஜ் (13), R. நிகல்யன் ராஜ், B. வேதா (11)ஆகியோர் தங்கப் பதக்கமும், வைபவ் தமிழினியன் (9) வெள்ளிப் பதக்கமும் வென்று சாதனை படைத்தனர். M.M. பிரணவ் தமிழினியன் (9) சிறப்பாகப் பங்கேற்றார்.

இதில் B. வேதா, தொடர்ந்து நான்கு போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்று, இறுதிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். அவரது சிறப்பான ஆட்டத்தைப் பாராட்டி "Best Fighter – Future of the Event" என்ற சிறப்பு விருது வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற இளம் வீரர்களை The Action Zone Boxing பயிற்சியாளர்கள் மஹேந்திரகுமார் மற்றும் மோகன்ராஜ் பாராட்டி வாழ்த்தினர்.

## வன்னிவேடு அரசு ஆரம்பப் பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ந. ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.08.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமில், வாலாஜா வட்டம் வன்னிவேடு ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அரசு ஆரம்பப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பள்ளி மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன், கல்வி நிலை மற்றும் அடிப்படை கற்றல் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார். மேலும், மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கற்றல் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, வட்டாட்சியர் திரு. நடராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## கோவை சிவாஜி காலனி பகுதியில்

# தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக நடைபெற்ற கலப்பு திருமணம்

### கிறிஸ்தவ மத போதகர்கள் முன்னிலையில், கிறிஸ்தவ முறைப்படி இருவரும் பைபிள்களை மாற்றி திருமணம் செய்து கொண்டனர்.

கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக நோட்டரி வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில், கிறிஸ்தவ முறைப்படி கலப்பு திருமணம் நடைபெற்றது. கோவை மாவட்டம் சோமையம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் சிமியோன் என்கிற ஆனந்தன் என்ற 49,

வயதானவருக்கும், கோவை மாவட்டம் இடையர் பாளையம் பகுதியை சேர்ந்த ரூத் என்கிற சுமித்ரா என்ற 44 வயது பெண்ணுக்கும், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, இக்கட்சியின் மாநில துணைத் தலைவரும் நோட்டரி வழக்கறிஞருமான புஸ்பானந்தம் தலைமையில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் வேறு வேறு வகுப்பை சேர்ந்தவர்கள் இருவரும் ஏற்கனவே திருமணமாகி விகாரத்தும் பெற்றவர்கள்,மணமகன் கோவை சரவணம்பட்டி பகுதியில் தேவாலயம் நடத்தி வருகின்றார். இருவரும் இரண்டு ஆண்டுகளாககாதலித்து வந்த நிலையில் இருவரது குடும்பத்தினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் இருவரும் மனப்பூர்வமாக வழக்கறிஞர் முன்னிலையில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.

தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது.

இந்த திருமணத்தை தாராபுரம் போதகர் அருள் தாஸ், திருப்பூர் போதகர்டேனியல்,ஆகியோர் கிறிஸ்தவ துதி பாடல்கள் பாடியும், பைபிள் வசனங்களை எடுத்து கூறியும் பைபிளை ஒருவருக்கொருவர் மாற்றி திருமணம் செய்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் கவுண்டம்பாளையம் அமல்ராஜ், அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் ஈடன்,வழக்கறிஞர் சதாசிவம், வழக்கறிஞர் குமாஸ்தாகள் லட்சுமி, திவ்யா,மயில்சாமி,மதிமுக சார்பாக மார்ஷல், தனபாலன், துரைராஜ், பாப்பாத்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





மதுரை மாவட்டம், மாநகராட்சி மண்டலம்–4, வார்டு எண் 86 வில்லாபுரம் நகர்ப்புற ஆரம்பசுகாதாரநிலையத்தில்உள்ளகாய்ச்சல்வார்டு,மருந்தகம்,ஆய்வகம்,பதிவுசெய்யும் இடம், உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டார். இணையவழியில் பதிவு செய்யப்பட்டு, மருத்துவரை நேரில் சந்தித்து சிகிச்சை பெறும் நடைமுறை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

# தூத்துக்குடி மேற்கு மண்டல அலுவலகத்தில் சுதந்திர தின விழா கொடியேற்றி மரியாதை



தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலகத்தில் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி கொடியேற்றி வைத்ததை தொடர்ந்து மேற்கு மண்டல அலுவலகத்தில் தேசியக் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மேற்கு மண்டலத் தலைவி அன்னலட்சுமி கோட்டுராஜா தலைமையில் மேற்கு மண்டல அலுவலகத்தில்தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா, மாநகர உறுப்பினர்கள் இசக்கி ராஜா, பொன்னப்பன், ஜான் கந்தசாமி மற்றும் மாநகராட்சி மேற்கு மண்டல அலுவலர் ராஜபாண்டி, பொறியாளர் ராகவி, அரசு ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சுதந்திரதினவிழாவை சிறப்பித்தனர். நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டதியாகிகளை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டது.

# கோவை குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் SPDI கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது



கோவை குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் SPDI கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் SPDI தேசிய தலைவர் ஃபைஜி கலந்து கொண்டார். மேலும் SDPI மாநில தலைவர் நெல்லை முபாரக் உட்பட அனைத்து மாவட்ட தலைவர்கள் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கோவையில் மூலப்பொருள் வங்கிமற்றும்விலை கட்டுப்பாட்டு வாரியம் அமைக்க வேண்டும், சிறு தொழில்களை பாதுகாக்க வட்டி மானியம் ஜிஎஸ்டி சீரமைப்பு மின் கட்டண சலுகை வழங்க வேண்டும், கோவைமற்றும்திருப்பூர் தொழில் மண்டலங்களில்மெட்ரோரயில்திட்டத்தை உடனடியாக மத்திய அரசு செயல்படுத்த வேண்டும், ஈரோடு மாவட்டத்தில் தேசிய மஞ்சள் வாரிய கிளை பெருந்துறையில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும், போதைப் பொருள் புழக்கத்தை தடுப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், தமிழக தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், மதம் மாறிய இஸ்லாமியர்களின் சமூக நீதி உரிமையை பாதுகாக்க தமிழக அரசு சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும், FCRA சட்ட திருத்த முடிவை மத்திய அரசு கைவிடவேண்டும்ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த SPDI தேசிய தலைவர் ஃபைஜி,பாஜகவிற்குஎதிராக போராட்டம் நடத்தவும் SDPI கட்சியை வலுப்படுத்தும் வகையிலும் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக பாஜக செயல்பட்டு வருகிறது என குற்றம் சாட்டிய அவர் பாஜகவிற்கு எதிராகமாணவர்கள் உட்பட பலதரப்பட்ட மக்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர் என்றும் ஒரு Failure அரசாக பாஜக அரசு உள்ளது என விமர்சித்தார்.

மக்களை மத அடிப்படையில் பிளவு படுத்தி தான் மீண்டும் மீண்டும் பாஜகவினர் ஆட்சிக்கு வந்து கொண்டிருப்பதாகவும் இதனை மக்களிடம் எடுத்து சொல்வோம் என்றும் கூறிய அவர் ஆனால் இதனை எல்லாம் செய்ய வேண்டிய பாரம்பரியமான கட்சிகளான காங்கிரஸ் போன்ற கட்சிகள் இதனை செய்யவில்லை மக்களிடம் சொல்லவில்லை மக்களின் போராட்டங்களுக்கு அவர்கள் ஆதரவும் அளிக்கவில்லை என்றார். பாஜகவை தோல்வி அடைய செய்ய வேண்டிய பொறுப்பு SDPI க்கு உள்ளது என்று கூறிய அவர் பாஜக ஒரு மதத்தை எதிராக காட்டி ஆனந்தம் அடைகிறார்கள் என்றும் வந்தே மாதரம், வக்ஃபு சட்டம் இரண்டும் ஒரு சமூக மக்களை கொச்சைப்படுத்தும் உள்ளது என்றார்.FCRA சட்டம் சேவை அமைப்புகளை முடக்கும் விதமாக உள்ளதாகவும்அது மிகவும்ஆபத்தானது என எடுத்து கூறி வருவதாகவும் எந்த ஒரு திருத்தமும் அதில் கொண்டு வரக்கூடாது என தெரிவித்தார்.

நீட் தேர்வு க்கு எதிராக முன்வைக்கும் கோரிக்கைகளை ஆதரிப்பதாகவும்ஆனால் CJP உடன் சேர்ந்து SDPI இல்லை என்றார். தேர்தல் நேரங்களில் பாஜகவிற்கு எதிர் என்றால் காங்கிரஸ் கட்சியை தான் குறிப்பி டுவார்கள்என்றும்ஆனால் தற்போதுஅப்படிஇல்லை மக்களேபொதுவெளிக்கு வந்துள்ளார்கள் என CJP யை சுட்டிக்காட்டினார். மேலும் 3 வருடத்தில் பாஜக All out ஆகிவிடுவார்கள் என்றும் CJP யை ஆதரிக்க கோடிக்கணக்கான மக்கள் வந்தார்கள் என்றார்.

மாநில தலைவர் நெல்லை முபாரக் பேசுகையில், நீட் கொண்டு வந்த காலத்தில் இருந்தே அதற்கு விலக்கு வேண்டும் என்று கூறிய மாநிலம் தமிழகம் என்றார். சிறைவாசிகள் விடுதலை கடந்த ஆட்சியில் கொஞ்சம் நடந்தது இந்த அரசு பொது மன்னிப்பின் பேரில் அனைவரையும் வெளிவிட வேண்டும். காலவரையற்ற நீண்ட பரோலை கொடுக்க வேண்டும் என்றார்.

தவெக அரசு 100 நாள் ஆட்சி குறித்தான கேள்விக்கு நல்லதை பாராட்டுகிறோம் தவறுகளை சுட்டி காட்டுகிறோம் என்று பதில் அளித்தார்.

# தீ விபத்தில் 30 லட்சம் மதிப்பிலான வலைகள் சேதம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

### நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய த.வெ.க தேர்தல் கண்காணிப்பாளர் ஜே.கே.ஆர்.முருகன்




திருச்செந்தூர் ஜீவாநகர் கடலில் மீன் வலை பின்னும் கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய தவெக தேர்தல் கண்காணிப்பாளர் ஜே.கே.ஆர்.முருகன் விரைவில் உரிய நிவாரணம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் ஜீவாநகர் பகுதியில் வசித்து வரும் மீனவர்கள் 25க்கும் மேற்பட்ட படகுகள் மூலம்மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். இந்நிலையில்,கடந்தசில நாட்களுக்கு முன்பு அதிகாலை நேரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் ரூ.30லட்சம்மதிப்பிலான மீன்பிடி வலைகள் தீயில் கருகி நாசமானதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, 15க்கும் மேற்பட்ட மீன்பிடி வலைகள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன. இதுகுறித்து தகவல் அறிந்த தமிழக வெற்றிக்கழக தூத்துக்குடி மாவட்ட தேர்தல் கண்காணிப்பாளர் ஜே.கே. ஆர்.முருகன் சம்பவ இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மீனவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். பின்னர்தேர்தல்கண்காணிப்பாளர் ஜே.கே.ஆர்.முருகன் கூறுகையில், "தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதுடன், சேதமடைந்த மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்களை ஆய்வு செய்து, அரசின் சார்பில் உரிய நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் ஜீவா நகர்மீனவசமூகத்தலைவர் இன்னாசி மற்றும் ஜோஸ்வா, ஜீவா நகர் 3வது வார்டு நிர்வாகி ரமேஷ்,மாவட்டஇணைச் செயலாளர் விஜய் ஆனந்த், நகரச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட துணைச் செயலாளர் முத்துக்கனி முருகேசன், கிங்ஸ் டிவி அன்பரசன், செல்வேந்திரமணி,மாணவர்அணி மாவட்ட இணைப்பாளர் பாலா,பிரேம் குமார்,பாபு உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி அமுதா நகரில் ஸ்ரீ ஆதிபிரம்ம சக்தி அம்மன் கோவில் கொடை விழா

### சிறப்பு அன்னதானத்தை 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் சரவணகுமார் தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி அமுதா நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதிபிரம்ம சக்தி அம்மன் திருக்கோவிலில் 26-ஆம் ஆண்டு கொடை உற்சவ விழாமற்றும்கால்நாட்டு விழா கடந்த 14.08.2026 முதல் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக 18.08.2026 நேற்று செவ்வாய்க்கிழமை கோவில் வளாகத்தில் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. கோவில் தர்மகர்த்தா சிவமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 50-வது வார்டு திமுக மாமன்ற உறுப்பினர் செ. சரவணகுமார் அன்னதானத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் 50-வது வட்ட பிரதிநிதி G.M.செல்வம் உடனிருந்தார்.அன்னதானநிகழ்ச்சியில் கோவில் நிர்வாகிகள், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாககலந்துகொண்டு சிறப்பித்தனர்.ஸ்ரீ ஆதிபிரம்ம சக்தி அம்மன் கோவிலின் 26-ஆம் ஆண்டு கொடை உற்சவ விழா 19.08.2026 இன்று புதன்கிழமை நிறைவு பெறுகிறது. இதையொட்டி காலை பொங்கல் விடுதல், கிடா வெட்டுதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. கொடை விழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டு அருள் பெற்றனர்.

# காணாமல் போன ஔவையின் கம்மல்.. கண்டுபிடித்துக் கையில் வழங்கிய கம்பன்

சென்னை கம்பன் விழாவில்(15-08-2026) கம்பனின் காப்பியச் சுவையால் செவிகள் சிலிர்த்து

திருவொற்றியூர் மூதாட்டி ஔவையின் (பெயர் : திருமதி. மோகனா) கம்மல் கழண்டு எங்கோ விழுந்துவிட்டது.

விலையுயர்ந்த தங்கக்கம்மல் காணாமல் போனதெனில் மனம் கலங்குவது இயல்பு.

'கம்பனருள் காலமெல்லாம் துணையிருக்கும்

காணாமல் போனதும் கிடைக்கும்' என்றார் மோகனா பாட்டி.

கம்பன் கழகத்தினரும் உடனே தேடலில் உதவி செய்ய கம்மல் கிடைத்தது; திருகாணி கிடைக்கவில்லை.

'கம்பனின் எழுத்தாணி திருகாணியைத் தரும்'என்றார்ஔவை மோகனா பாட்டி.

அடுத்த ஒரே நிமிடத்தில் திருகாணி தரையில் தலைநிமிர்ந்தது.


பல்லாயிரக்கணக்கானோர் நடந்து, நின்று, அமர்ந்து, எழுந்து நடந்த ஏவி. எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடந்த அதிசயம் இது.

கம்ப ரசிகர்கள் உள்ள இடத்தில் அவர்கள் ஏற்பது அடுத்தவர் பொருளல்ல. அன்பேயாகும்!



திருமதி மோகனா பாட்டியும், அவரது உறவினர் திரு உதயன் அவர்களும் கம்பனோடு கரைந்து நன்றி தெரிவித்தனர்.

# நாகர்கோவில் பீச்ரோடு பகுதியை சேர்ந்த சமூக சேவகர் மற்றும் தவெக பிரமுகர் ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள கோரிக்கை



கன்னியாகுமரி மாவட்டம்நாகர்கோவில் வைத்தியநாதபுரம் சிஎஸ்ஐ தேவாலயம் முன்பு மேற்கூறையுடன் பல ஆண்டுகளாக இருந்த பேருந்து நிறுத்தம் (அதாவது பஸ் ஸ்டாப்) திடீரென இரவோடு இரவாக நாகர்கோவில் மாநகராட்சி மூலம் அகற்ற பட்டுள்ளது.மேலும்இப்பேருந்து நிறுத்தம் மூலம் இதனை சுற்றியுள்ள பீச்ரோடு, வைத்தியநாதபுரம்,பெரியவிளை,வடலிவிளை வயல்தெரு,பாவலர் காலணி, இந்து கல்லூரி பகுதிகளில் இருந்து பொது மக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் இப் பேருந்து நிறுத்தம் வந்து தான் பல்வேறு ஊர்களுக்கு செல்லமுடியும் தற்போது பேருந்து நிறுத்தம் அகற்ற பட்ட காரணத்தால் மழை காலத்தில் எந்த ஒரு இடத்திலும் ஒதுங்கி நிற்க முடியாது.மேலும் தினந்தோறும் பொது மக்கள் பேருந்து ஏறுவதற்கு மதிய வேளைகளில் வருபவர்கள் அந்த இடத்தில்எங்கும்ஒதுங்கி நிற்கமுடியாது அதனால் பொது மக்கள் மற்றும் முதியவர்கள், சின்ன சிறு பிள்ளைகள் வெயிலின் தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு மிகவும் சோர்வு அடைந்து தலை சுற்றி கீழே தரையில் அமர்வது அன்றாடம் வாடிக்கையாக நடைபெற்று வருகிறது.எனவே பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் வைத்தியநாதபுரம் சிஎஸ்ஐ தேவாலயம் முன்பு செயல் பாட்டில் இருந்து வந்த பேருந்து நிறுத்தம் இருந்த அதே இடத்தில் மீண்டும் அமைக்கவேண்டும்என பொதுமக்கள் நலன் கருதி கேட்டுக் கொண்டார்.



திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் மதிப்புமிகு க.வை.ராஜ்குமார் அவர்களை ★★தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் ★மரியாதை நிமித்தமாக சந்தித்து பட்டு வேட்டி அணிவித்து புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்து மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுல் குறித்து எடுத்துரைத்தார்

# தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு பல்வேறு கல்வி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். மாணவி ஹாசினி வரவேற்புரை வழங்கினார்.

பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பேனா, வாட்டர் கேன், ஸ்லேட் உள்ளிட்ட பல்வேறு வகையான எழுதுபொருள்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கல்வித் தேவைகளை கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட இப்பொருட்கள்,அவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்கு பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு தேவையான கல்வி உபகரணங்களை வழங்கியதன் மூலம், அவர்களின் கல்வி மீதான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையிலும், கற்றல் சூழலை மேம்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சி அமைந்தது.

நிகழ்ச்சியின் நிறைவில் மாணவி நந்தனா நன்றி கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியைகள் ஆர்த்தி, சிவரஞ்சனி, பாண்டிச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர். பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## உளுந்தூர்பேட்டை அருகே உள்ள

# ஆர்.ஆர்.குப்பம் ஏரியில் மண் அல்ல வந்த ஜேசிபி மற்றும் 6 டிராக்டர் டிப்பர்களை பொதுமக்கள் மறித்து முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ஆர்.ஆர். குப்பம் கிராமத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பெரிய ஏரி உள்ளது இந்த ஏரியில் கடந்த சில நாட்களாக இரவுபகல்பாராமல்எந்தவித அனுமதியும் இல்லாமல் டிராக்டர் மற்றும் டிப்பர் லாரிகளில் மண் அள்ளப்பட்டு வருவதாக கிடைத்த தகவலின் பேரில் இன்று காலை ஊராட்சி மன்ற தலைவர் தங்க. ரமேஷ் தலைமையில் கிராம பொதுமக்கள் அங்குள்ளஏரியில்திரண்டனர் அப்பொழுது ஏரியில் மண் அள்ளுவதற்காக வந்த ஒரு ஜேசிபி இயந்திரம் மற்றும் ஆறு டிராக்டர் டிப்பர்களின் முன்பாக இருசக்கர வாகனங்களை நிறுத்தி யாரை கேட்டு மண் அள்ளுகிறீர்கள் மண் அள்ளுவதற்கு யார் அனுமதி அளித்தது என்று கூறி டிராக்டர் ஓட்டுநர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு மணல் அள்ள வந்த வாகனங்களை முற்றுகையிட்டனர் மேலும் இது குறித்து உளுந்தூர்பேட்டை வருவாய் துறை மற்றும் எடைக்கல் காவல்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர் அதன் பேரில் ஆர்.ஆர். குப்பம்ஏரிக்குவருவாய்த்துறையினர்மற்றும்காவல் துறையினர்விரைந்து வந்தனர் அப்பொழுது அதிகாரிகளிடம்கிராமமக்கள் மட்டும் ஊராட்சி மன்ற தலைவர்தொடர்ந்து இரவு இரவு பகல் பாராமல் ஏரியில் மண் அள்ளும் கும்பல் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லைஎனகேட்டனர். இதைத் தொடர்ந்து வருவாய் துறை மற்றும் காவல்துறையினர் ஏரியில் மண் அள்ளுவதற்காக வந்திருந்த ஜேசிபி இயந்திரம் மற்றும் 6 டிராக்டர் டிப்பர் ஆகியவற்றை பறிமுதல் செய்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றனர். மேலும் ஆர்.ஆர். குப்பம் கிராமத்தில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பெரிய ஏரியில் உள்ளூர் திமுக பிரமுகர்களின் உதவியுடன் வெளியூரில் உள்ள வசதி படைத்த திமுகவினர் தொடர்ந்து இரவு பகல் பாராமல் எந்த விதமான முன் அனுமதியும் பெறாமல் டிராக்டர் டிப்பர்கள் மூலம் ஏரி மண் அள்ளி செல்வதாகஊராட்சிமன்ற தலைவர் தங்க.ரமேஷ் கூறினார்.

# கோவையில் ஒரே மணி நேரத்தில் 195 உலக நாடுகளின் தேசியக் கொடிகளை அடையாளம் கண்டு, 50 மழலை மாணவ, மாணவிகள் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ள சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

கோவை மாவட்டம் சூலூர் அடுத்த சோமனூரில் செயல்பட்டு வரும் வாசுகி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியில்,நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, 'யங் மைண்ட்ஸ் ஃபிளாக் மாஸ்டரி வேர்ல்ட் ரெக்கார்ட்' என்ற தலைப்பில் இந்த உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பங்கேற்ற 50 மாணவ-மாணவிகளுக்கு உலக நாடுகளின் 195 தேசியக் கொடிகள் காட்டப்பட்டன. கொடிகளை பார்த்தவுடன், அவை எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை மாணவர்கள் துல்லியமாகவும் உடனடியாகவும் கூறி அசத்தினர். மேலும், கொடிகளின்வரிசையைமாற்றிக் கேட்டபோதும், மாணவர்கள் சிறப்பாக அடையாளம் கண்டு தங்களது நினைவாற்றலையும் அறிவுத்திறனையும் வெளிப்படுத்தினர்.

பெற்றோர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. மாணவர்களின் திறமையை வேர்ல்ட் ரெக்கார்ட் யூனியன் அமைப்பின் பிரதிநிதிகள் நேரில் ஆய்வுசெய்து,இந்தசாதனையை அதிகாரப்பூர்வ உலகசாதனையாகபதிவு செய்தனர். தொடர்ந்து, சாதனைபடைத்தமாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பள்ளித் தாளாளர் அருண்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பள்ளி முதல்வர் யசோதா,



அருணாபிரமிதா,யோகா ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள்மற்றும்பொதுமக்கள் கலந்து கொண்டு சாதனைபடைத்தமாணவர்களை பாராட்டினர்.

மாணவர்களின் அறிவுத்திறனை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக பள்ளிமுதல்வர்யசோதா தெரிவித்தார். இதுபோன்ற நிகழ்வுகள் மூலம்,சிறு வயதிலேயே உலக நாடுகள் மற்றும் அவற்றின் கொடிகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

ஒரே மணி நேரத்தில் 195 நாடுகளின் கொடிகளை அடையாளம் கண்டு மழலை மாணவர்கள் படைத்த இந்த உலகசாதனை,கோவையில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், துடுப்பதியில் மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் உள்ளாடை தயாரிப்பு நிறுவனத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிடம் சிகிச்சை முறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.08.2026) கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவ,மாணவியர்களிடம் கற்றல்குறித்துமாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமிநேற்று(19.08.2026)கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், நடைபெற்ற உங்களைத்தேடி உங்கள் ஊரில் முகாமில் நில வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் பொது மக்கள் இணைதளம் வாயிலாக பதிவு செய்யப்படும் மனுக்களின் நிலைகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (19.08.2026) ஆய்வு மேற்கொண்டார்.

# US envoy Sergio Gor calls J&K 'important part of India', says travel advisories will be reconsidered



US Ambassador to India Sergio Gor on Wednesday called Jammu and Kashmir an "important part of India" during his first visit to the Union Territory, while also saying the United States would reconsider its travel advisories for the region.

Gor made the remarks during his visit to Srinagar, signalling a significant shift in the tone of Washington's engagement with Jammu and Kashmir. The US State Department currently places Jammu and Kashmir, except eastern Ladakh and Leh, under a Level 4 "Do not travel" advisory, citing terrorism and civil unrest. Gor's visit is his first to Jammu and Kashmir since taking charge as US ambassador to India and President Donald Trump's Special Envoy for South and Central Asia. It also comes after heightened tensions in the region following the April 2025 Pahalgam terror attack and Operation Sindoor.

During his visit, Gor said the United States would reconsider its advisories on travel to Jammu and Kashmir, responding to concerns over the impact of the warnings on tourism in the region. The current US advisory asks American citizens not to travel to Jammu and Kashmir, except for eastern Ladakh and Leh. It specifically cites the possibility of terrorist attacks and violent civil unrest, and flags Srinagar, Gulmarg and Pahalgam among tourist destinations where violence could occur.

# காலிக்குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியல்



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட வைதீகாரன் கொட்டாய் மற்றும் நடுஜோகிப்பட்டி சாலஜோகிப்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 70க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன இந்த கிராமங்களுக்கு முறையாக குடிநீர் வழங்கிய மேல்நிலை தேக்கத்தொட்டிற்கு மின் மோட்டார் பழுது ஆன நிலையில் சுமார் மூன்று மாத காலமாககுடிநீர்வழங்கமுடியாதசூழ்நிலையில் இருந்து வந்தது இதற்கு மாற்றாக ஒகேனக்கல் குடிநீர்கொண்டு வரப் வர பட்டது இந்ததிட்டம் கொண்டு வந்து செயல்பாட்டில் இருந்தது ஆனால் அது தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது இந்த நிலையில் பலமுறை ஊராட்சி செயலாளர் பூபதியிடம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் இவர்கள் புகார் கூறியும் எந்த பலனும் இல்லை இதற்கு மாறாக இன்று சுமார் 50க்கும் மேற்பட்ட பெண்கள் காலி குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டனர் அப்போது தகவல் அறிந்து வந்த மத்தூர் காவல்துறையினர் மற்றும் சாம்பல் பட்டி காவல் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி குடிநீர் பிரச்சினை தீர்த்து வைப்பதாக பொதுமக்கள் இடையே பேச்சுவார்த்தை நடத்தினர் இதனிடையில் மத்தூர் வட்ட வளர்ச்சி அலுவலரும்தகவல்அறிந்துவந்துநேரில்சம்பவ இடத்தில் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் பின்பு சாலை மறியல் கைவிடப்பட்டது இதனால் இந்த வழியாக செல்லும் தனியார் பேருந்து மற்றும் அரசு பேருந்துகள் காலதாமதமாக இயக்கப்பட்டது முறையான பிரச்சனையை தீர்க்காமல் அதிகாரிகள் அலட்சியம் காட்டுவதால் பொதுமக்கள் இடையே இது போன்ற ஒரு கொந்தளிப்புஏற்படுத்தும்வகையில்அதிகாரிகள் உருவாக்கி வருகிறார்கள் எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இது போன்ற மக்கள் பணிகளை செய்யாமல் இருக்கும் அரசு அதிகாரிகளின் மீது உடனடியாக நடவடிக்கை வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கிராம மக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர் இதை உடனடியாக ஆய்வு செய்து நிறைவேற்ற வேண்டும்என்பதுசமூகஆர்வலர்களின் கருத்து பொது மக்களின் கருத்து

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.